**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-1
Date : 13.03.2025
Case No. : **O.S.** 59/2021
Nationality : Indian
Name : பன்னீர் செல்வம்
Religion :
Father's/Husband's Name : ரங்கநாதன்
Age : 73
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் வரவழைக்கபட்டு கூடுதல் முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் வாதி ஆவேன் . ஏற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் ஒரு பகுதியான புல எண் 181/9 பி க்கான கணினி பட்டா வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.08.1996 ந் தேதியிட்ட வாதி சுந்தரேசன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பொது அதிகார ஆவணத்தை எனது பெயரில் சொத்துக்களை வாங்கவும் அது சம்பந்தமான ஆவணங்களை பதிவு செய்வதற்கும் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்வதற்கு சொத்துக்களை பராமரிப்பதற்கும் கொடுத்துள்ளேன். மேற்படி பொது அதிகார ஆவணத்தை 01.02.2021 ந் தேதி ரத்து செய்துவிட்டேன். மேற்படி 01.02.2021 ந் தேதியிட்ட ரத்து பத்திரம் சார்பதிவாளரல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சொத்துக்களை சரியாக பராமரிக்காததாலும் கணக்குகளை சரியாக ஒப்படைக்காததாலும், என்னை ஏமாற்றுவது போல் நடந்து கொண்டதாலும் நான் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்தேன் . பிராது

படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.17 18:48:02 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.